OS.No. 178/2022

Date : 05.02.2026

Witness Name & Rank – சரவணண் – PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

**1.** எனது அம்மா எனது சகோதரர் 1ம் பிரதிவாதிக்கு 24.03.2021ம் தேதி ஒரு உயில் எழுதிவைத்தார் என்றால் சரிதான். அந்த உயில் படி 1ம் பிரதிவாதிக்கு 524 சதுரடி வீட்டு மனை ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் பொது இடம் 994 சதுரடி என்றால் சரிதான். மேற்படி பொது இடத்தில் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் சரிபாதியாக 497 சதுரடி உள்ளது என்றால் சரிதான். அந்த பொது இடத்தில் 3 துவைக்கும் இடம், 3 கழிப்பறை உள்ளது என்றால் சரிதான். எனது தாயார் மறைந்த பிறகு அந்த உயில்படி 1ம் பிரதிவாதிக்கு 524 சதுரடி நிலம் வந்து அவர் சுவாதீனத்தில் உள்ளது என்றால் சரிதான். பொது இடம் குறுகளான இடம் என்றால் அந்த சந்து குறுகளாக இருக்கும் பிறகு இடம் உள்ளது. அந்த பொது இடத்தை நானும் எனது சகோதரரான 1ம் பிரதிவாதியும் கூட்டாக தான் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது அண்ணன் வெளியில் குடியிருந்து வந்ததால் அவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை வாடைக்கு விட்டிருந்தார் என்றால் சரிதான். எனக்கு ரோட்டு முகப்பிலும் எனது அண்ணனுக்கு உள்ளேயும் இடம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது குடும்பத்திற்கும் எனது அண்ணண் குடி வைத்திருந்த வாடகைதாரருக்கும் அவ்வப்போது சிறு சிறு பிரச்சனை பொது இடம் பயன்பாடு தொடர்பாக இருந்தது என்றால் இல்லை.

2. அதனால் நான் 1ம் பிரதிவாதிக்கு தொந்தரவு செய்ததால் தான் வெளியில் இருந்த 1ம் பிரதிவாதி நிலத்தை 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி நானும் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தான் இடத்தை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். நாங்கள் தற்போதும் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு இடையுறு செய்து வருகிறோம் என்றால் இல்லை. 2 மற்றும் 3 பிரதிவாதிகள் உரிய மறுபயனின் பேரில் தான் சொத்தை வாங்கியுள்ளனர் என்றால் சரிதான். பொது இடம் குறுகளான இடம் என்பதால் அது எக்காலத்திலும் பாகப்பிரிவினை செய்ய முடியாது எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.